


## SRI SARADA COLLEGE OF EDUCATION (AUTONOMOUS), SALEM-16

**REACCREDITED BY NAAC WITH "A" GRADE (III Cycle)**

# UNEARNED LEAVE FOR PRIVATE AFFAIRS

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18:45

114/2016 – 17 23-06-2016.

அனுப்புநர்
செயலர்
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி
(தன்னாட்சி) சேலம் – 16.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
தர்மபுரி மண்டலம்
அரசுக் கலைக் கல்லூரி வளாகம்
தர்மபுரி 636 705

அய்யா

பொருள் – ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), சேலம் – முனைவர் சி.ஜனகவல்லி, முதல்வர், அவர்கள் வெளிநாடு செல்வதால் – முதல்வர் பொறுப்பு ஏற்க முனைவர் ச.சாந்தி அசிஸ்டண்ட் புரபஸர் அவர்களை நியமனம் செய்வது – தொடர்பாக

பார்வை – கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி ஆணை மு.மு.எண்.20661/எப்1/2016 நாள் -06-2016

எங்கள் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி.ஜனகவல்லி, அவர்கள் 20-06-2016 முதல் 13-08-2016 வரை வெளிநாடு செல்வதால் முனைவர் ச.சாந்தி அசிஸ்டண்ட் புரபஸர் அவர்களை முதலவர் பொறுப்பில் நியமித்து கல்லூரிக் குழுவினால் தீர்மானம் செய்யபட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்கண்ட காலத்தில் அனைத்து கல்லூரி பணிகளையும் முதல்வர் சார்பாக முனைவர் ச.சாந்தி அசிஸ்டண்ட் புரபஸர் அவர்கள் முதல்வர் பொறுப்பில் இருந்து செயல்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றியுடன்

இங்ஙனம்

இணைப்பு -

1. பார்வையில் கண்டுள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை , அவர்களின் அனுமதி ஆணை நகல்
2. கல்லூரிக் குழுவின் தீர்மான நகல்

செயலர்
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி
(தன்னாட்சி).
சேலம்–636 016.

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18:45

17.06.2016 காலை 11.00 மணி

ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியின் கல்லூரிக்குழுக் கூட்டம் 17.06.2016 தினத்தன்று காலை 11.00 மணிக்கு கூடியது.

தீர்மானம் எண்: 1

சென்ற 13.6.2016 தேதிய கூட்டத்தின் செயல்முறைகளைப் படித்து அங்கீகரிக்கப்பட்டது.

தீர்மானம் எண்: 2

ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வரும் முனைவர். சி. ஜனகவல்லி, என்பவர் 20.6.2016 முதல் 13.8.2016 55 நாட்கள் சொந்த அலுவல் காரணமாக வெளிநாடு (U.S.A.) செல்ல இருப்பதால், இக்கல்லூரியில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களில் பணியில் மூத்தவரான முனைவர். ச. சாந்தி, வரலாற்றுத் துறை, உதவிப் பேராசிரியர் அவர்களை முதல்வர் பொறுப்பில் இருந்து செயல்படுவதற்கு இக் கல்லூரிக் குழுவால் அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

கையொப்பங்கள்:

1. யதீஸ்வரி விநாயகப்ரியா – விநாயகப்ரியா
   செயலர்
2. யதீஸ்வரி இறைப்ரியா – இறைப்ரியா
   நிர்வாகக் குழுவின் பிரதிநிதி
3. யதீஸ்வரி சிவசக்திப்ரியா – சிவசக்திப்ரியா
   அங்கத்தினர்
4. முனைவர் சி. ஜனகவல்லி – சி. ஜனகவல்லி
   முதல்வர்
5. முனைவர். ச. சாந்தி – ச. சாந்தி
   அங்கத்தினர்
6. முனைவர் ரா. செல்வமதி சுகிர்தா – ரா. செல்வமதி சுகிர்தா
   அங்கத்தினர்
7. திருமதி. சு. சித்ரா – சு. சித்ரா
   அலுவலக பிரதிநிதி

ATTESTED

விநாயகப்ரியா
செயலர்
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி
(தன்னாட்சி).
சேலம்-636 016

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள், சென்னை–600 006.
முன்னிலை: முனைவர்.கா.சேகர் எம்.எஸ்ஸி., எம்.பில்., பிஎச்.டி.,
மூ.மு.எண். 20661/எப்1/2016 நாள்: .06.2016.

பொருள் : உதவிபெறும் கல்லூரிகள் – சேலம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர்.சி.ஜனகவல்லி என்பார் அயல்நாடு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் எண்.36959/எஸ்1/80, நாள் 25–7–80.
2. அரசு கடிதம் எண்.80267/ஜி1/80–2 கல்வி நாள் 25–9–80.
3. அரசாணை (பல்வகை) எண்.40, ப.ம.நி.சீ.துறை நாள் 22–1–90.
4. தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.0618/அ3/2016, நாள். 23.05.2016.
5. சென்னை–28, குற்றவியல் புலனாய்வுத் துறை, காவல்துறை கண்காணிப்பாளர் கடித எண்.SCA.4. No.12696/1915/NOC/2016/C நாள்.13.06.2016.

SRI SARADA COLLEGE OF EDUCATION ★ SALEM-636 016 ★
6412
17 JUN 2016

***

பார்வை 4–ல் காணும் கடிதத்தில், சேலம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர்.சி.ஜனகவல்லி என்பார் அமெரிக்கா நாட்டில் கலிபோர்னியாவில் வசிக்கும் தனது மகள் மற்றும் உறவினர்களை பார்த்து வருதல் தொடர்பாக 20.06.2016 முதல் 13.08.2016 வரை 55 நாட்கள் ஈட்டிய விடுப்பில் அயல் நாட்டிற்கு சென்று வர அனுமதி வேண்டி செயலர் சமர்ப்பித்துள்ள கருத்துருவினை கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணை வேண்டி தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார்.

(2) அயல்நாடு சென்றுவர விண்ணப்பித்துள்ள கல்லூரி முதல்வர் சார்பில் பார்வையில் காணும் இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் கல்லூரி முதல்வர் கோரிக்கை, அளித்துள்ள உறுதிமொழிகள் மற்றும் கல்லூரிச் செயலர் அளித்துள்ள உறுதி மொழிகள் அனைத்தும் கல்லூரிக் கல்வி இயக்குநரால் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2–ல் காணும் அரசு கடிதத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, சேலம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியில் முதல்வராகப் பணிபுரியும் முனைவர்.சி.ஜனகவல்லி என்பவர் கீழ்க்குறிப்பிட்டுள்ள விடுப்பில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அயல்நாடு சென்றுவர அனுமதி வழங்கப்படுகிறது.

ஈட்டிய விடுப்பு அனுமதி : 20.06.2016 முதல் 13.08.2016 முடிய (55 நாட்கள்)

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18

நிபந்தனைகள் :-

அன்னார் அயல்நாடு செல்லும் பொருட்டு அரசு நிதியிலிருந்து பணம் ஏதும் பெறக்கூடாது.

அயல் நாட்டில் தங்கி இருக்கும் காலங்களில் இந்திய நாட்டிற்கு எதிரான செயல்களில், ஈடுபடக்கூடாது

அயல் நாட்டில் தங்கி இருக்கும் காலங்களில் அன்னார் வேறு வேலை வாய்ப்புகளில் ஈடுபடக்கூடாது.

ஒப்பளிக்கப்பட்ட விடுப்பு முடிந்ததும் அன்னார் கல்லூரியில் கண்டிப்பாக பணியில் சேரவேண்டும்.

கல்லூரி முதல்வர் அயல்நாட்டு பயணத்திற்கென தினப்படி மற்றும் பயணப்படி எதுவும் அரசு நிதியிலிருந்து பெறக்கூடாது.

அன்னாரது பயணம் சொந்தப் பொறுப்பில் செல்வதாகவே கருதப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளையும் கல்லூரி நிர்வாகம் அளித்துள்ள உறுதி மொழிகளையும் செயல்படுத்துவது கல்லூரி நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

அயல்நாட்டில் தங்கியிருக்கும்போது கல்லூரி முதல்வர் தன் விருப்பமாக பணி ஓய்வில் செல்லக் கூடாது.

கோடை விடுமுறை காலத்தினை சார்ந்த கல்லூரி செயலர் / சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

(3) மேற்கண்ட கல்லூரி முதல்வரின் பணிப்பதிவேட்டில் இது குறித்து தக்க பதிவுகளை தவறாது செய்வதுடன் அன்னார் அயல்நாட்டில் பயணம் முடித்து கல்லூரியில் பணியில் சேர்ந்த தேதியை தவறாமல் தொடர்புடைய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநருக்கு கல்லூரிச் செயலர் தெரிவித்தல் வேண்டும். பணி சேர்அறிக்கை நகல் ஒன்றினை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு தவறாது அனுப்புதல் வேண்டும்.

Santhi 13/6/16

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

பெறுநர்
செயலர்,
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி,
சேலம்–16.

நகல் : 1. தொடர்புடைய கல்லூரி முதல்வர் (செயலர் வழியாக)
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம், தருமபுரி–05.

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.20